ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2193/51 - 2020 සැප්තැම්බර් මස 18 වැනි සිකුරාදා - 2020.09.18

*2193/51 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: MTR/LND/L1/AQUI/3999.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/9/2017/WS/543.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

தென் மாகாணத்தின், மாத்தறை மாவட்டத்தின், மாத்தறை பிரதேச செயலகப் பிரிவின் வேரகம்பிட்ட கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ளதும், முற் பிரதிப்பட இல. மாற/2836 படத்தில் துண்டு இல. 01 எனக் காட்டப்பட்டுள்ள மேற்குறித்த காணியை மாத்தறை IV ஆம் கட்ட நீர்த் தேக்கத் திட்டத்தின் கீழ் நில்வலா நதிக்குக் குறுக்கே உப்புத்தடுப்புக் கோபுரம் ஒன்றை அமைப்பதற்கு எடுத்துக்கொள்ள அரசு உத்தேசித்துள்ளது.

**01. துண்டு இல. 01**

காணியின் பெயர் : மதுகலகும்புர; விபரம் : திறந்த வெற்றுக் காணி; உரிமையாளர் : லீலசேன தலதாவத்த; விஸ்தீரணம் : 0.0749 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந்திகதி மு. ப. 10.30 மணிக்கு மாத்தறை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தீபிகா கே. குணரத்ன,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
மாத்தறை,
2020, செத்தெம்பர் 10.

10 - 135



இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: அம்பகோ/3/7/அ/03.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4/3/15/2016/VE/255.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

நுவரெலியா மாவட்டம், அம்பகமுவ கோரளை பிரதேச செயலகப் பிரிவின் 319 H, நியூவெலிகம கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள, நியூவெலிகம கிராமத்தில் நில அளவை அதிபரினால் தயாரிக்கப்பட்ட 2020.07.17 ஆந் திகதியுடைய ஆரம்ப வரைபட இல. 3401 இன் துண்டு இல. 01 இல் காட்டப்பட்டுள்ள 0.5677 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித்துண்டின் எல்லைகள் :

**01. துண்டு இல. 01 - காணியின் பெயர் : கிளங்கன் தோட்டம்; உரிமை கோருபவரின் பெயர் மற்றும் முகவரி : காணி புணர்நிர்மான ஆணைக்குழு, இல. 475, கடுவெல வீதி, பத்தரமுல்ல; விஸ்தீரணம் : 0.5677 ஹெக்டயார்**

வடக்கு : T. P. 58903 & P. P. 3093 இன் துண்டு இல. F 24; கிழக்கு : T. P. 58903 & P. P. 3093 இன் துண்டு இல. F 24 மற்றும் வீதி (பிரதேச சபை); தெற்கு : T. P. 58903 & P. P. 3093 இன் துண்டு இல. F 24; மேற்கு : T. P. 58903.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அம்பகமுவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். விசாரணையின்போது காணி ஒப்பனைகள் மற்றும் வேறு ஏதேனும் ஆதாரங்கள் இருப்பின் அவற்றையும் முன்வைக்கவும்.

சிதாரா றுவினி கமகே,
பிரதேச செயலாளர்,
அம்பகமுவ கோரளை,
கினிகத்ஹேனை.

பிரதேச செயலகம்,
அம்பகமுவ கோரளை,
2020, செத்தெம்பர் 16.

10 - 136

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 11/3/3/1/ 34.
காணி அமைச்சின் குறிப்பு இல.: LD/ 05/2009/MV/135A.

மொரகஹகந்த மற்றும் களுகங்கை அபிவிருத்தித் திட்டத்திற்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

இங்கு பகிரங்கத் தேவை என்பது மொரகஹகந்த மற்றும் களுகங்கை அபிவிருத்தித் திட்டத்திற்கான காணி எடுத்தலாகும்.

மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், லக்கல-பல்லேகம பிரதேச செயலாளர் பிரிவிலே, லக்கல பல்லேசிய பத்துவவில், இல. E 402 C, வெலிவரணாகொல்ல கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2020.07.29 ஆந் திகதி நிறைவேற்றப்பட்ட, பி. ஆ. வரைபட இல. 20, குறைநிரப்பி இல. 186, பத்திர இல. 259 இல் காட்டப்பட்டுள்ள 0.2521 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணித் துண்டின் விபரம் :

**01. துண்டு இல. 9281**

காணியின் பெயர் : எந்தாகல; விபரம் : அலுவலக தோட்டம்; உரிமை கோருபவர் : அரசு; இல. LL 366 கொண்ட அனுமதிப் பத்திரத்தின் கீழ் வெலிவரணாகொல்லயில் வதியும் லொகுகே சமிந்த ஜயசூரிய பயனுருகின்றார்; விஸ்தீரணம் : 0.2521 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி மு. ப. 9.00 மணிக்கு லக்கல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ். விஜயகுமார்,
பிரதேச செயலாளர்,
லக்கல.

பிரதேச செயலகம்,
லக்கல,
2020, செத்தெம்பர் 14.

10 - 137